2015 செப்டம்பர் 4]

ஆட்சித் தலைவரின் கருத்துரு பெற்று, அந்தச் சாலையைச் சீரமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

236—

மீன் பதனிடும் நிலையம்

***22228**—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், கோனேரிப்பட்டியில் மீன் பதனிடும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், கோனேரிப்பட்டியில் மீன்கள் பதப்படுத்தும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வஞ்சனை செய்வோருக்கு சிம்மமாய், வாகைதனைப் படைப்போருக்கு சிகரமாய், வாழும்வகை அறிவோருக்கு வசந்தமாய், வசை உணர்வு கொண்டோருக்கு வெண்சுடராய் வீறு கொண்டெழுந்து, வெற்றிதனை அடைந்து, தங்கத் தமிழ்நாட்டை தரணிபோற்றும் நற்சான்றாய் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சி நடத்தும் அம்மா, தொண்டாலே களிக்கும்

உள்ளம், தொய்வில்லா கடமையாற்றும் அலைகடல், தமிழ் மறவர் உள்ளம் உங்கள் பக்கம், அவனியில் தமிழ் அன்னையே உங்கள் மனம் சிந்திக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையில் மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்கள் கெடாமல் பாதுகாப்பாக வைக்க குளிர்சாதன வசதியுடன்கூடிய அறை ஒன்று அமைக்கவும், அங்கு வண்ண மீன்களை உற்பத்தி செய்து பொதுமக்களுக்கு விற்பனை செய்ய ஏதுவாக, வண்ண மீன்கள் உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய சங்கரி தொகுதியிலே மீன் பதனிடும் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தார். இப்போது மேட்டூர் தொகுதியிலே மீன் பதனிடும் நிலையம் கேட்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி சங்கரி, ஆனால், தற்போது மேட்டூர் தொகுதியில் மீன் பதனிடும் நிலையம் கேட்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற மேட்டூர் பகுதியிலே மீன் வளத் துறை மூலமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, வாய்ப்பு இருப்பின், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு அவர்கள் வாங்கும் மீன் வலைகளுக்கு 50 சதவிகித மானியம் வழங்கப்படுவதுபோல, கண்ணாடிநார் பரிசல்களுக்கும்

மானியம் வழங்கி, அவற்றை மற்ற பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், உள்நாட்டு மீனவர்கள் மீன்களை விற்பனை செய்ய மானிய விலையில் மொபட் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு மீனவர்களுக்கு ஒரு பொற்காலம் என்று சொல்லலாம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உள்நாட்டு மீனவர்கள் பரிசல் வாங்குவதற்கும், வலை பின்னுவதற்கும் 50 சதவிகித மானியம் வழங்குகிறார்கள். அதைப்போல உள்நாட்டு மீனவர்கள் இறால் மற்றும் மீன் பண்ணையிலே தொழில் மேற்கொள்ளும்போது aerator, generator வாங்குவதற்கு 50 சதவிகித மானியம் கொடுத்துக் கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். உள்நாட்டு மீனவர்கள் மீனைப் பிடித்தவுடன் உபயோகிப்பாளர்களே அதை வாங்கிக்கொள்கிறார்கள். எனவே, மீன் விற்பனை செய்ய 50 சதவிகித மானியத்தில் கொடுக்க இயலாது.

ஆக, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் (குறுக்கீடுகள்) பரிசலுக்கும், வலைக்கும் 50 சதவிகித மானியம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, உள்நாட்டு மீனவர்கள் இறால் பண்ணையில் மீன் பிடிப்பதற்கு அந்த aerator, generator வாங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 50 சதவிகித மானியம் கொடுக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 237, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.